# ★ அரசு மீது காமினி குடும்பத்தினர் சீற்றம்

(கொழும்பு)
காமினி திசநாயக்கா கொலை தொடர்பான விசாரணையில் தாங்கள் சமர்ப்பித்த பல விபரங்களை, அரச அதிகாரிகள் உபயோகிக்கவில்லை என்று காமினி திசநாயக்காவின் குடும்பத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாகக் காமினியின் குடும்ப வழக்கறிஞரான ஏ. தயா பெரேரா நேற்றுப் பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்கையில்: இக்கொலையில் சந்தேகிக்கப்படுவோரில் விடு

(3ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 21 இதழ் 276
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 7-11-1994

## வீதி ஒழுங்குமுறை: காவல்துறையினர் நடவடிக்கை எடுப்பர்

(யாழ்ப்பாணம்)
யாழ். குடா நாட்டில் அதிகரித்து வரும் வீதி விபத்தை தடுக்கும் பொருட்டு பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டும் நாளை மறு தினம் புதன்கிழமை முதல் வீதிகளில் பக்கம், பக்கமாகக செல்லும் துவிச்சக்கரவண்டிகள் செலுத்துனர்கள் மீது காவல்துறையினர் ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக தமிழீழ

(4ம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.க. - பொ.ச.மு. - பொலிஸாருக்கிடையில் கேகாலையில் கோஷ்டி மோதல்

# துப்பாக்கிச் சூட்டில் மூவர் பலி

## ஐ. தே. க. மாகாண சபை உறுப்பினரும் பலி

[கொழும்பு]
**கேகாலை பகுதியில் ஐ.தே.க.—பொ.ச.மு. ஆதரவாளர்களுக்கிடையில் நடந்த கோஷ்டி மோதலிலும் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டிலும் மத்திய மாகாண சபை ஐ.தே.க. உறுப்பினர் உட்பட மூவர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர். இம்மோதலின் போது துப்பாக்கிச் சண்டையும் கைக்குண்டு வீச்சும் இடம் பெற்றுள்ளது.**

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது; கேகாலை கெட்டிமுல்ல சந்திக்கருகில் நேற்று முன் தினம் இரவு இரு கட்சி ஆதரவாளர்களுக்குமிடையில் வாக்குவாதத்தில் ஆரம்பமான சண்டை பின்கைகலப்பாக மாறி துப்பாக்கிச் சண்டை வரைநீடித்துள்ளது. இருதரப்பும் கடுமையான மோதலில் ஈடுபட்டிருந்த போது அவ்விடம் விரைந்த பொலிஸாரும் இந்த சண்டை

(4ம் பக்கம் பார்க்க)

## தெற்கில் பாதுகாப்பு பலமடைகிறது

[கொழும்பு]
ஜனாதிபதி தேர்தல் நெருங்க நெருங்க தெற்கில் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த சில தினங்களாக தெற்கில் பரவலாக வன்முறைச்சம்பவங்கள். மோதல்

[3ம் பக்கம் பார்க்க]

## ஐ.தே.க. பிரசாரக் கூட்டத்தில் குண்டு வெடிப்பு; ஒருவர் பலி

### பன்னலையில் நேற்று சம்பவம்

[கொழும்பு]
தெற்கில் பன்னலைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற ஐ. தே. க. தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் குண்டொன்று வெடித்ததில் ஒருவர் ஸ்தலத்திலே பலியானதுடன் நால்வர் படுகாயமடைந்தனர்.

பன்னல-கிம்புல வீதியில் நேற்று மாலை ஐ. தே. க.வினரின் ஜனாதிபதி தேர்தல் பிரசா

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் பற்றிய செய்திகள் போடக்கூடாதாம்!

(கொழும்பு)
எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசநாயக்கா கொலை சம்பந்தமாகப் புலிகள் பற்றிச் செய்திகள் எதனையும் வெளியிடவேண்டாம் என்று அரசாங்கத் தொடர்புச் சாதனங்களுக்கும், அரசு சார்புப் பத்திரிகைகளுக்கு பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கட்டளை பிறப்பித்துள்ளது என்று 'சுதந்திரப் பத்திரிகையாளர் சங்கம்' பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் மீது குற்றம் சுமத்தியுள்ளது,

(4-ம் பக்கம் பார்க்க)

## சத்திரிகாவை ஆதரிக்குமாறு தொண்டமான் கோரிக்கை

(கொழும்பு)
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி வேட்பாளர் திருமதி சந்திரிகா விஜயகுமாரதுங்காவுக்கு தோட்டத் தொழிலாளர்களும் மலையக மக்களும் ஆதரவு வழங்க வேண்டும் என அமைச்சர் தொண்டமான் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்

(4-ம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சு விரைவில் ஆரம்பம்

(கொழும்பு)
தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள்-அரசுப் பிரதிநிதிகளுக்கு மிடையேயான சமாதானப் பேச்சுவார்த்தைகள், வெகு விரைவில் ஆரம்பிக்கப்படும் என ஏற்கனவே விடுதலைப் புலிகளுடன் யாழ்ப்பாணத்தில் பேச்சுவார்த்தை நடத்திய அரச தரப்புப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளர்.

தமது பெயரை வெளியிட விரும்பாத அவர், கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது: இனப் பிரச்னைக்கு இராணுவத் தீர்வு

(4-ம் பக்கம் பார்க்க)

## 8ம், 9ம், 10ம் திகதிகளில் பாடசாலைகள் வழமைபோல் இயங்கும்

(யாழ்ப்பாணம்)
வடபகுதியில் நாளை முதல் 10-ம் திகதி வியாழக்கிழமை வரை பாடசாலைகள் உட்பட சகல அரச நிர்வாகங்களும் தமது வழமையான கடமைகளை மேற்கொள்ளலாமென தமிழீழ நிர்வாக சேவையினர் தெரிவித்துள்ளனர்.

(3-ம் பக்கம் பார்க்க)

## தேர்தல் பிரசாரத்தில் வடக்கு - கிழக்கு பிரச்னைக்கே சந்திரிகா முதலிடமளித்தார்

[கொழும்பு]
ஜனாதிபதி தேர்தலில் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைதான் முக்கிய அம்சமாக இடம் பெற்று வருகின்றது என்று பி. பி. ஸி.சந்தேசிய தெரிவித்துள்ளது.

பி. பி. ஸி, மேலும் தெரிவிக்கையில்; பிரதமர் சந்திரிகா ரூபவாஹினி, வானொலி தேர்

(4ம் பக்கம் பார்க்க)

## இருவார நிவாரணம்

(அரியாலை)

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க பாவனையாளருக்கான புரட்டாதிமாத முதல் இருவார நிவாரண விநியோகம் (19 ஏ முத்திரைக்கானது) நேற்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 15ம் திகதி செவ்வாய் வரை நடைபெறுமெனவும் அதற்குமுன் நிவாரணப் பொருட்களை பெற்றுக் கொள்ளுமாறும் பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார். -59

ரி

## இராசி பலன்

07 - 11 - 1994

திங்கட்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி-21)

சதுர்த்தி காலை 10-55 வரை மூலம் பி. ப. 7-04 வரை, சித்தயோகம், இராகுகாலம் காலை 7-05 முதல் 9-05 வரை, சுபநேரம் நண்பகல் 10-05 முதல் 1-35 வரை.

மேடம்: நினைவு தடுமாற்றம், சுற்றத்தவர் பகை, பண முடை.

இடபம்: கல்வியில்பெருமை, பேச்சுத் திறமை, காரியசித்தி,

மிதுனம்: பெரியோர் நட்பு, தொழில் லாபம், மனநிறைவு,

கடகம்: மனதில் துக்கம், குடும்ப பகை, அலைச்சல்.

சிங்கம்: நோய் உபாதை, கருத்துவேற்றுமை, கவலை.

கன்னி: உயர்ந்தபிரதாபம், தெய்வீகப்பணி, பயணம்.

துலாம்: வீட்டில் துயர், அதிகாரிகள் சினம், மனச் சுமை.

விருச்சிகம்: விநோத சிந்தனை. சகோதர வெகுமதி, பிதாஅறிவுரை.

தனுசு: வருவாய் பாதித்தல், மனையாள் கோபம், வேதனை.

மகரம்: ஞான சிந்தனை, வேலைப்பளு, விருந்துபசாரம்.

கும்பம்: சொற் போர், வேலையாள் சகாயம். நற் செய்தி.

மீனம்: மனக்கிலேசம், தொழில்பகை, அவசரமுடிவு.

— ஜோஸ்யர்

வியாபாரம் பெருக

விளம்பரம் செய்க

# பொதுசன அமைப்புகளின் நோக்கங்கள்

தமிழீழ ஊரக மேம்பாட்டு பங்கேற்பு தமிழீழ ஊரக மகளிர் மேம்பாட்டு பங்கற்பு அவைகள்/சன சமூக நலனோம்பு மூலவள நிலையங்களினதும் ஏனைய பொது அமைப்புக்களினதும் தமிழீழ நிர்வாக சேவையுடனான நிர்வாகத்தொடர்ப முறைகளும், பதிவு செய்தல், செயற்படுத்தல் தொடர்பான வழிகாட்டலும்.

(நேற்றைய தொடர்ச்சி)

எப்போதும் மக்கள் தங்களைத் தாங்களே நம்பி வாழப் பழகிக்கொள்ள வேண்டும். தங்களில் தாங்களே நம்பி இருப்பதனையும் ஒருவருக்கொருவர் இணைந்து உழைப்பதன் மூலம் கிடைக்கப்படும் மூலவளங்களை மாற்று உபயோகமாக்கி தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தங்களை தாங்களே ஒருங்கமைத்துக்கொள்வதன் மூலம் எதிர்கொள்ளும் எல்லாக் கஷ்டங்களையும், இடர்பாடுகளையும் வெற்றிகொள்ளலாம். அபிவிருத்திக்கு உள்ளூர் மூலவளங்களையும், மக்களது ஆக்க சக்திகளையும், திறன்களையும் கிடைக்கின்ற சிற்றளவு நிதியினையும் பயன்படுத்தி உற்பத்தி இலக்கை அடைய வேண்டும். ஒரு விடயத்தைத தனிநபர் செய்வதைவிட பலர் ஒன்றிணைந்து திட்டம் ஒன்றைச் செயற்படுத்தும்போது அனுபவம் வாய்ந்த வரிவானதுமான செயல் வெளிப்பாடாகின்றது. இவ்வாறு மக்கள் ஒன்று சேர்ந்து உழைக்கும்போது உதவும் வெளியீட்டை சமமாகப் பகிர்ந்துகொள்ளவும் முடியும்.

பொது நன்மைக்காக மக்கள் ஒன்று சேர்ந்து உழைக்கும்போது பங்கு கொண்ட அனைவரும் கடுமையாக உழைக்கவேண்டும் பொது நன்மைக்காக ஒன்று சேர்ந்து உழைக்கும்போது நேர்மையாகவும் ஒருவருக்கொருவர் விசுவாசகமாகவும், இன்சொல் பேசுபவராகவும் ஒவ்வொருவரும் கடுமையான கட்டுப்பாடுடையவர்களாகவும் இருக்கவேண்டும். மக்களிடையே கருத்துவேறுபாடு அல்லது வேற்றுமை இருப்பின் எல்லோரும் ஒன்று சேர்ந்து கருத்துப் பரிமாறல் செய்து ஒற்றுமையையும், ஒருங்கிசைவையும் மீள நிலை நாட்டவேண்டும். ஒருவருக்கொருவர் உதவி செய்யத் தயாராக இருக்கவேண்டும். சமூகத்தில் ஒருவருக்கு துன்பம் வந்தால் எல்லோரும் விரைந்தோடி அவருக்கு உதவவேண்டும். சமூகத்தின் அபிவிருத்திக்கு தேவையானவற்றை சிறந்த அறிவாளிகளோடும் சிறந்த நற்றலைவர்களோடும் சேர்ந்து ஒருங்கமைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அபிவிருத்தி அல்லது வருமானம் உருவாக்கும் செயற்பாடுகளில் ஒவ்வொருவரும் பங்கு பற்றி உற்பத்தி அதிகரிப்பையும் சுகமான வாழ்வு நிலையையும், கல்வி அதிகரிப்பையும் மேம்படுத்துவதோடு எங்களது சமூக ஒழுங்கமைப்பையும் ஒருங்கமைப்பையும் பலப்படுத்த வேண்டும்.

இங்கு குறிப்பிடப்பட்ட நெறி முறைகளுக்கமைவாக எதிர்கால சமூக அமைப்புகள் செயற்பட்டு மக்களுக்கு பணியாற்றுவதற்கான ஏற்பாடுகளில் முதற்கட்ட நடவடிக்கையாக இருக்கின்ற பொது அமைப்புகளை தமிழீழ நிர்வாக சேவையில் பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## பதிவுசெய்தல்

ஏற்கனவே அரசாங்க நிர்வாக திணைக்களங்களில் பதிவு செய்து கொண்ட பதிவுசெய்து தற்போதும் இயங்கிவருகின்ற பொதுசன பிரதி நிதித்துவமுடைய அமைப்புக்களை பதிவு செய்தல் வேண்டும். ஆனால் கூட்டுறவுச் சங்கங்கள் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்கள், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள், தவிர்ந்த சகல அமைப்புகளும் அதாவது பொதுச்சபை, நிர்வாகசபைகளை அமைத்து இயங்கி வருகின்ற கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், இந்து மன்றங்கள், கிறிஸ்தவ மன்றங்கள் (சகல பிரிவுகளும்) விளையாட்டுக்கழகங்கள், தொழிற் சங்கங்கள் நலன்புரி நிலையங்கள், சமூக அபிவிருத்தி ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனங்கள் போன்றன தமிழீழ நிர்வாக சேவையில் உணவு, கூட்டுறவு, சமூக சேவைகள், மறுசீரமைப்பு பிரிவில் பதிவுசெய்து கொண்டு செயலாற்றலாம், இவ்வமைப்புகளில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் ஆகிய மூன்று ஊரக மட்டத்திலுள்ளவற்றிற்கு மாத்திரம் தமிழீழ நிர்வாகசேவையின் சட்டதிட்டங்கள் (யாப்புவிதி) வழங்கப்படும், அதேவேளை இவ்வமைப்புகளில் முன்சொல்லிய மூன்று அமைப்புகளின் பெயர்கள் வருங்காலத்தில் முறையே ''தமிழீழ ஊரக சமூக மேம்பாட்டு பங்கேற்பு அவைகள்'' என்றும் தமிழீழ ஊரக மகளிர் மேம்பாட்டு பங்கேற்பு அவைகள் என்றும் ''சனசமூகநலனோம்பு மூலவள நிலையங்கள்'' என்றும் பெயர் கொண்டு அழைக்கப்படும். விளையாட்டுக் கழகங்கள் ஏனைய அமைப்புகளுக்கும் தூய தமிழ்ப் பெயர்களை அவ்வப் பொதுச்சபையின் அங்கீகாரத்தின் பின் தமிழீழ நிர்வாக சேவையின் அனுமதியுடன் பெயர் சூட்டிக் கொள்ளலாம். இச்சட்ட திட்டங்களுக்கேற்பவே எதிர்காலத்தில் இவ்வமைப்புகள் செயல்படும். ஏனைய அமைப்புகள் ஒவ்வொன்றும் தங்களால் தயாரிக்கப்பட்ட சட்ட திட்டங்களுக்கு (யாப்பிற்கு) அமைவாக செயலாற்றும். எனினும் சட்ட திட்டங்கள் பற்றி தமிழீழ நிர்வாகசேவைக்கு தெரிவித்து முன் அனுமதி பெற்றே செயற்படல் வேண்டும். இந்த நடைமுறை தமிழீழ நிர்வாக சேவையில் பதிவு செய்வதோடு நடைமுறைக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

★ ஏற்கனவே வெளியிடப்பட்ட பத்திரிகைச் செய்திகளின்பிரகாரம் முடிவு திகதி 10-10-1994 ம் திகதியுடன் முடிவடைந்துள்ள போதும் பெருமளவிலான சங்கங்கள் பதிவு செய்யவில்லையென தெரியவருவதனால் மீண்டும் 25-10-94 ம் திகதியிலிருந்து பதிவுசெய்ய முடியும் என்பதனையும் இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

★ பதிவு செய்யும் நோக்கத்துடன் எத்தகைய அமைப்புகளையும் தமிழீழ நிர்வாக சேவையினால் வழங்கும் படிவங்களைப் பெற்று அப்படிவத்திலேயே பூரணப்படுத்தி பதிவிற்கான விண்ணப்பங்களை நேர்முகமாகவே கையளிக்கப்படவேண்டும்.

★ படிவத்தில் காணப்படும் தகவல்கள் தரவுகள் நன்கு பரிசீலனை செய்து குறித்த அமைப்பின் கடந்தகால செயற்பாடு, மக்களின் ஈடுபாடு ஊரக சூழல் தேவைகள் ஆகியவற்றை முதன்மைப்படுத்தும் வகையில் பதிவுகள் அனுமதிக்கப்படும்

★ பதிவுக்கான முழுமையான தரவுகள், தகவல் இல்லாது இருக்கும் போது ஊரக மட்டத்தில் காணப்படும் குடும்பங்களில் ஒவ்வொருவர் என்ற அடிப்படையில் 01% எண்ணிக்கையிலும் அதிகமானோரின் விருப்பு இருக்குமாயின் குறிப்பிட்ட நிறுவனம் பதிவுசெய்ய அனுமதிக்கப்படும்.

★ படிவங்களைப் பூரணப்படுத்தியதும் உறுதிப்படுத்தலுக்காக ஒதுக்கப்பட்ட கூடுகளில் உறுதி செய்பவர்களிடமிருந்து கையொப்பம் பெற்று, தமிழீழ நிர்வாக சேவைப்பதிவகத்தில் ஒப்படைக்க வேண்டும்,

★ அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட அவைகள், அங்கங்கள், கழகங்கள், நிலையங்கள் அனைத்திற்கும் பதிவிற்கான சான்றிதழ்கள் 1994-மார்கழி மாதம் 15ம் திகதிகு முன்பாக கோட்ட மட்டத்தில் தலைவர், செயலாளரை அழைத்து வழங்கப்படும்.

★ பதிவுச்சான்றிதழ் பெற்ற அமைவளங்கள் முதலாவது வருடாந்த பொதுச் சபைக் கூட்டத்தை தை மாதம் 1995/01/01 தொடக்கம் பங்குனி மாதம் 1995/03/ 31ம் திகதிக்கு முன்பாக கூட்டியாக வேண்டும்.

★ தமிழீழ நிர்வாக சேவையின் சட்டதிட்டங்களை தழுவி நடைமுறைப்படுத்தும் அவைகள் மட்டும் பொதுச்சபைக் கூட்டம் விடுதலைப் புலிகளின் ஊரக, வட்ட, கோட்ட மட்டத்திலுள்ள அரசிற்துறைப் பொறுப்பாளர்களில் ஒருவர் அல்லது தமிழீழ நிர்வாக சேவையினால் குறித்துரைக்கப்படும் அனைவரினதும் முன்னிலையில் நடைபெறும்.

★ மேலும் குறித்த நிர்வாக எல்லைப் பரப்பினுள் கடமையாற்றும் குறித்த பொது அமைப்புகள் தொடர்பான அரச அலுவலர்களுக்கும் அழைப்புவிடலாம். அல்லது அவர்களே சமூகம் கொடுக்கலாம்.

★ தமிழீழ ஊரக மேம்பாட்டு பங்கேற்பு அவைகள் தமிழீழ ஊரக மகளிர் மேம்பாட்டு பங்கேற்பு அவைகள், சனசமூக நலனோம்பு மூலவள நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் தவிர்ந்த ஏனைய அமைப்புகள் தாங்களாகவே பொதுச்சபையைக் கூட்டி உத்தியோகத்தர் தெரிவுகளை மேற்கொள்ளலாம். ஏற்கனவே சட்ட திட்டங்கள் இருக்குமாயின் தமிழீழ நிர்வாக சேவைக்குதெரிய படுத்திஅனுமதிபெறல் வேண்டும்- இல்லையாயின் சட்டதிட்டங்களைத் தயாரித்து முன் அனுமதிக்காக வழங்கப்படுதல் வேண்டும்.

★ பதிவுச் சான்றிதழ் பெற்றுக்கொண்ட அமைப்புகள் அந்தந்த நிறுவன சட்ட திட்டங்களுக்கேற்ப முகாமை செய்து கொள்வதுடன் மாத மொருமுறையேனும் செயற்குழுக் கூட்டத்தை கூட்டி, அதன் அறிக்கையையும், கணக்கறிசகையையும் தமிழீழ நிர்வாக சேவைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

★ பொதுச்சபைக் கூட்டம் மூன்று மாதற்திற்கு ஒரு முறையேனும் கூட்டப்பட்டு அதன் அறிக்கையும் பொதுச் சபை அங்கீகரிக்கப்பட்ட கணக்கறிக்கையும் தமிழீழ நிர்வாக சேவைக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

★ வருடமுடிவில் தமிழீழ நிர்வாக சேவையினால் அங்கீகரிக்கப்பட்ட எண்பார்வைக் கழகங்களில் எண்பார்வை செய்யப்பட்ட அறிக்கை பொதுச்சபையினால் அங்கீகரிக்கப்பட்டபின் தமிழீழ நிர்வாக சேவைக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

★ சனசமூக நலனோம்பு மூலவள நிலையங்களுக்கான முழுமையான நடைமுறைகள் பறறி தனியான பத்திரிகை வெளியீடு ஒன்று வெளியிடப்படவிருக்கின்றன.

# 1994 மாவீரர் நாள் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்[

1994 மாவீரர்நாள்தொடர்பாக வட்ட ரீதியாக ச.ச. நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், மாதர் சங்கங்கள். விளையாட்டுக் கழகங்கள், கோவில் நிர்வாகங்கள், வர்த்தக சங்க அங்கத்தவர்கள் மற்றும் பொதுஅமைப்புகளுக்கிடையே கலந்துரையாடல்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று 7ம் திகதி பி. ப. 4 மணிக்குகரவெட்டிஉடுப்பிட்டி பகுதி பொது அமைப்புகளுக்கான கூட்டம் பொன்னம்பலம் வித்தியாலயம், மூத்த விநாயகர் கோயிலடியிலும், வலிகாமத்தில் யாழ். நல்லூர் பகுதிக்கான கூட்டம் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்திலும் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்திலும் கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன.

நாளை 8ம் திகதி செவ்வாய்க்கிழமை கோப்பாய்- உடுவில்/ தெல்லிப்பழை, கொடிகாமம் பகுதிகளிலுள்ள மேற்படி அமைப்புகளுக்கான கலந்துரையாடல் பி. ப. 4 மணிக்கு நடைபெறவுள்ளது. கோப்பாய் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியிலும், உடுவில்/ தெல்லிப்பழை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும், கொடிகாமத்தில் திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

9-ம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு பளை மகா வித்தியாலயத்திலும், சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையிலும், சண்டிலிப்பாய் ராஜா பாடசாலையிலும் அப்பகுதி பொது அமைப்புகளுக்கான கலந்துரையாடல் இடம் பெறும்.

10-ம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் மாவீரர் நாள் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

-ரி

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,

யாழ். கிளை

தெல்லிப்பளை பிரிவின் ஒத்திவைக்கப்பட்ட

1994 ஆண்டுப்

பொதுக் கூட்டமும்

பிரிவுத் தேர்தலும்

மேற்படி கூட்டமும், புதிய உத்தியோகத்தர் தெரிவும் 20-11-94ல் நடைபெறும். மனுப் பத்திரங்களை 09-11-94 தொடக்கம் 11-11-94 வரை தெல்லிப்பளை பிரிவுக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்திய மனுப் பத்திரங்கள் 12-11-94 அன்று மு. ப. 9-00 மணி தொடக்கம் பி. ப. 4-00 மணிவரை பிரிவுக் காரியாலயத்தில் ஏற்கப்படும்.

14-11-94 அன்று மு. ப. 9-00 தொடக்கம் பி. ப. 4-00 மணிவரை பிரிவுக் காரியாலயத்தில் விரும்பியோர் தமது மனுவை வாபஸ் பெற்றுக்கொள்ளலாம். பொதுக்கூட்டம் யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் 20-11-94 அன்று மு. ப. 10-00 மணிக்கு நடைபெறும். அக் கூட்டத்தில் தேர்தல் நடைபெறும், 12-02-94க்கு முன்னதாக 1994 அங்கத்துவப் பணத்தை பிரிவின் ஊடாக கிளையில் செலுத்திய இலங்கை செஞ்சிலுவைச்சங்க உறுப்பினர் மட்டுமே இப் பொதுக்கூட்டத்திலும், தேர்தலிலும் பங்குபற்ற தகுதியுடையோராவர்.

கௌரவ செயலாளர்,

தெல்லிப்பளை பிரிவு,

இ. செ. சி. சங்க யாழ் கிளை.

ஆலை ஒழுங்கை,

மல்லாகம்.

05-11-94.

(எ-4486)

### மணிவாக்கு

காற்றில் பறந்தோடும் காய்ந்த சருகு போல் நீ வீண்கர்வம் இல்லாதவனக இரு.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்

ஜனதிபதி தேர்தல் ஏற்பாடுகள் பூர்த்தி

# தேர்தல் கடமைகளில் ஒரு லட்சம் பேர் ஈடுபடுவர்

[கொழும்பு]

எதிர்வரும் 9-ம் திகதி புதன் கிழமை மூன்ருவது ஜனதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. அன்று காலே 7மணி முதல் 4 மணிவரை ஜனதிபதித் தேர்தல் வாக்களிப்பு நடைபெறும். தேர்தல் முடிவுகள் தொகுதிவாரியாக தெரிவிக்கப்படும்.

நள்ளிரவுக்குப்பின்னர் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். 10 ம் திகதி காலேயில் ஜனதிபதியாக யார் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்ற முடிவு வெளியாகும்.

நாடளாவிய ரீதியில் நடைபெறும் இத் தேர்தலில் ஒரு லட்சம் பேர் தேர்தல் கடமையாற்றுவார்கள். 9580 வாக்களிப்பு நிலேயங்களில் வாக்குப் பதிவுகள் இடம்பெறும்.

கடந்த பொதுத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்ற அனைவரும் இத்தேர்தலில் வாக்களிக்க முடியும்.

வடபகுதியை பொறுத்தவரை இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் தேர்தல் நடைபெறும். இதேவேளை தேர்தல் பாதுகாப்பு கடமைகளில் 50,000 பொலிசார் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

ஒவ்வொரு வாக்களிப்பு நிலேயத்திலும் இரு பொலிசார் வீதம் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள். தேவை ஏற்படின் இதன் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது.

வாக்களிப்பு நிலேயங்களுக்கும் பொலிஸ் நிலேயங்களுக்கும் தகவல் பரிமாற்றங்கள் செய்யப்படவுள்ளன. பொலிஸ் ரோந்துச் சேவையும் அடிக்கடி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இத்தேர்தலில் வன்முறைகளையும் துஷ்பிரயோகங்களையும் தவிர்த்துக் கொள்ளுமாறும் ஜனதிபதி தேர்தல் வேட்பாளர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர். (ரி)

## இன்று

[யாழ்ப்பாணம்]

திருமுருக கிருபானந்தவாரியாரின் ஓராண்டு நினைவையொட்டி பிரார்த்தனையும், கூட்டமும் இன்று பி. ப. 3 மணிக்கு பருளை முருகன் ஆலயத்தில் பிரம்மஸ்ரீ சண்முகரத்தினசர்மா தலைமையில் இடம்பெறும். இதில் திரு. நடேசன் சிவசண்முகமூர்த்தியின் சொற்பொழிவும் இடம்பெறும். (சி]

0 0 0

[யாழ்ப்பாணம்]

''புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டத்தின்கீழ் சந்தைப்படுத்தல், நிதி தொடர்பாக ப. நோ.கூ.சங்க, ப. தெ. வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க, இரண்டாம்படி, கூட்டுறவு நிறுவன தலைவர், பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மாவட்டக் கூட்டுறவுச்சபை தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும்.

## நமது நோக்கு

### ஆக்கபூர்வச் சிந்தனை

தென்னிலங்கையில் ஓர் கிராமம் அங்கே பீட்டர் சிங்கோ ஓய்வுபெற்ற அதிபர் வயது 78. அவரது மனைவியும் பிள்ளைகளும்ஆசிரியர்கள் எனவே அவரது வீட்டை குருமனை என்றபொருள்பட்ட ''குருகெதர'' என்றே அழைத்தனர்.

ஒருநாள் 19 வயது வாலிபன் வருகிருன். இனத்தவன் என்ற காரணத்தால் தங்க இடமளிக்கப்படுகின்றது. அன்றிரவு அலுமாரி திறக்கும் சத்தம் கேட்க அவர்கள் எழும்பி விளக்கைப் போட திருட்டு அம்பலமாக அவன் அங்கிருந்த ஐவரையும் பிணமாக்கி விட்டுத்தான் தப்பி ஒடுகிருன்.

யாரிவன்? சிறீலங்கா இராணுவத்தில் சேர்ந்த [illegible] படை வீரன். இதனைக் கேள்வியுற்ற அவனது தந்தையானஇன்னேர் பாடசாலே அதிபர்கூறியது என்ன?

''படையிற் சேர்ந்திருக்கவேண்டியதில்லே. அங்கிருந்து வந்ததன் ஒழுக்கக் கட்டுபபாட்டோடு இருப்பான் என எண்ணினேன் ஏமாந்தேன்!''

இலங்கையில்- அரசியல் வாதிகள் தமது சொந்த நலன்களுக்காக இனவாதத்தை முன்னெடுத்து ஆட்சி அதிகாரத்தைத் வைத்திருக்கலாம் என எண்ணிச்செயற்பட்டனர்.

அதனுல் இராணுவத்தை நீதிக்குப் புறம்பான வழியில் ஆக்கிரமிப்பில் ஈடுபடச்செய்தனர்.

தமிழ்ப் பிரதேசங்களை ஆக்கிரமிப்பதில் இருந்த அக்கறை, படையினரின் ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றிற் காட்டப் படவில்லே.

உயர் இலட்சியம் எதுவும் இல்லாது ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்திற் செல்வம்சேர்க்கலாம் என்ற குறிக்கோளோடுவந்தவர்கள் இலட்சியவாதிகளால் அந்த நோக்கம் முறியடிக்கப் பட்டபோதுபடையைவிட்டுச்செல்வதும் சொந்தக் கிராமங்களிலேயே கொலே கொள்ளைகளில் ஈடுபடுவதும் செய்திகளாக வருகின்றன. படங்களுடன் கூடிய கதைகளாக வருகின்றன.

எனவே சமாதான முயற்சிகள் பற்றிப் பேசும் போது அவர்கள் முட்டுக் கட்டைகள் போடுவது விளங்கிக்கொள்ளக் கூடியதே!

ஆக்கிரமிப்புச் சிந்தனையை விடுத்து ஆக்கபூர்வமான சிந்தனையோடு செயற்பட வேண்டிய காலம்வராமலாபோகும்?

## மொறட்டுவ பல்கலேக்கழக மாணவர் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மொறட்டுவ பல்கலேக்கழகத்தில் மாணவர்கள் உபவேந்தரின் அலுவலகத்தை சுற்றிவளைத்து தமது பிரச்னைகளுக்கு உடனடியாக தீர்வு காணவேண்டுமென்று கோரி ஆர்ப்பாட்டத்தில் இறங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப் படுகிறது.

மாணவர்கள் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தி, உலக வங்கியின் எண்ணடபடி கல்வியை சரழிப்பதற்கு பல்கலேக்கழக நிர்வாகம் முயன்று வருகின்றது என்று, மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தினர்கள் என்றும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ம-சி

## தேர்தல் கூட்டங்களில் மக்கள் குறைவு

(கொழும்பு)

காமினி திஸாநாயக்காவின் கொலேக்குப் பின்பு, ஜனதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பங்குபற்றும் மக்கள் குறைவாகவே உள்ளனர் என்று ஏ. எப். பி. செய்தியாவர் அமல் ஐயசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இதனுல் பிரதான கட்சிகள் இரண்டும் கூட்டங்களே குறைந்துக்கொண்டன. நேரடியாக ஐக்கியதேசியக் கட்சி இனவாதத்தில் இறங்கியுள்ளது என்று கூறமுடியாது. ஹட்சன் சமரசிங்க, பூமிபுத்திர வேட்பாளர் இருவரும் தேர்தல் மேடைகளில் இனவாதம் பேசுகிருர்கள். இது ஐக்கியதேசியக்கட்சிக்கு சாதகமாகவும் அமையும்.

என்ருலும் மக்கள், பொதுசனஐக்கிய முன்னணியின் பக்கம் இருக்கிருர்கள்போல் தென்படுகிறது என்ருர். ம-சி

## பலதும் பத்தும்

### நகச்சாயம்

மருதோன்றி (மருதாணி) இட்டு நகங்களைச் சிவப்பாக்கி அந்த அழகையிட்டுப் பெருமைப்பட்டவர்கள் நம்மவர்கள்.

இன்று செயற்கையான நகச்சாயங்கள்— பல வர்ணங்களில் வந்து விட்டன. இவற்றைத் தொடர்ந்து பாவிப்பதில எச்சரிக்கையாக இருக்க வேண்டுமாம். என் தெரியுமோ? இச்சாயங்கள் ஒட்டி இருப்பதற்கென ஒரு வகைப் பிசின் சேர்க்கிருர்கள். அது நகங்களிற் சிறுசிறு துவாரங்களை உண்டாக்க அவற்றில சிறு கிருமிகள் சேர அவைநகத்திலுள்ள சத்துக்களை அரித்துத் தின்ன நகம் சொத்தையாகி விடுமாம்!

அழகிற்காகப் பூசப்போய் தொடர்ந்து பூசி அழகைக் கெடுக்கலாமா?

—மயூரன்

## சந்திரிகாவை ஆதரிக்க பல அமைப்புகள் முடிவு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனதிபதித் தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி ஜனதிபதி வேட்பாளரான சநதிரிகா குமாரணதுங்காவை ஆதரிக்க பல அமைப்புகள் முன்வந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம், பொது லிகிதர் சேவைச்சங்கம், அகில இலங்கை அரசாங்க எழுதுவினைஞர் சேவைச்சங்கம், தேசிய ஆசிரியர் சங்கம், அகில இலங்கை ஆயுர்வேத சங்கம், கிழக்கு பல்கலேக்கழக சுதந்திர விரிவுரையாளர் சங்கம், இலங்கைச் சுதந்திர பிரிவினுக்கள், ஐக்கிய அரசாங்க ஊழியர் சங்கம் போன்ற பல்வேறு அமைப்புகளும் ஆதரவு தெரிவிப்பதற்கு இணங்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. ம-சி

### தெற்கில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கள் இடம பெற்றுவருவதால் தேர்தலன்றும், அடுத்துவரும் நாட்களிலும் வன்முறைகள் பெருமளவில் வெடிக்கலாமென எதிர்பாாகப்படுகிறதாம்.

இவற்றை சமாளிக்கும் விதத்தில் படையினர் மிகுந்த உஷார் நிலேயில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி]

### 8ம், 9ம், 10ம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்களின் நன்மை கருதியும், பாடசாலே மாணவரின் கல்வியையும் பரீட்சையையும் கருத்தில் கொண்டு நாளை 08-ம் திகதி தொடக்கம் 10-ம் திகதி வியாழன் வரைக்கும் யாழ்ப்பாணம், முல்லேத்தீவு, கிளிநொச்சி, மன்னர், வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள அரச திணைக்களங்களும், கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச் சங்கங்களும், சகல பாடசாலேகளும், தங்களுடைய வழமையான கடமைகளை எவ்வித தடங்கலின்றியும் செய்யலாம் என்றும் தமிழீழ நிர்வாக சேவையினர் தெரிவித்துள்ளனர்.

ஜனதிபதி தேர்தலேயொட்டி மேற்படி 3 நாட்களும் பாடசாலேகளுக்கு அரசு, விடுமுறை வழங்கியுள்ளதும் தெரிந்ததே. (சி)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-11-07**

திங்கள் இரவு

08-01 தளிர்கள் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி.
08-20 காந்தருபன் அறிவுச்சோலே முதலாம் ஆண்டு நிறைவு நிகழ்ச்சிகளின் தொகுப்பு.
08-30 செய்திகள்
08-40 தரிசனம் ஓவியக் கலேஞர் திரு. இராசையா அவர்களுடனுன செவ்வி
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

**1994—11—08**

செவ்வாய் காலே

07-02 மாவீரவணக்கம்
07-15 இன்றைய தாரகை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்.
07-40 தாயகப் பாடல்கள்
08-00 நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நல்லூர், சங்கானை, சண்டிலிப்பாய், ஊர்காவற்றுறை, வேலணை பிரதேசங்களைச் சேர்ந்த அனைத்து கிராம உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை மாலே 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலகங்களை சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை மாலே 3-00 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

கரவெட்டி, பருத்தித்துறை. மருதங்கேணி பிரதேச செயலகங்களை சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் 9-ம் திகதி புதன்கிழமை மாலே 3மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் கல்லூரியில் நடைபெறும்.

சாவகச்சேரி, பளை பிரதேசங்களை சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் 10-ம் திகதி வியாழக்கிழமை மாலே 3மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் நடைபெறும். அனைத்து கிராம உத்தியோகத்தர்களும் தவருது கலந்துகொள்ளும்படி வேண்டப்படுகின்ருர்கள்.

## 762 தேர்தல் முறைப்பாடு

]கொழும்பு[

ஜனதிபதி தேர்தல் சம்பந்தமாக இதுவரை 762 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஜனதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் ஆரம்பித்த நாளிலிருந்து இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

### அரசு மீது காமினி

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

தலேப் புலிகளும் அடங்குவர். அதிகாரபூர்வமாகக் கூறப்படாதவரை தகவல் தெரிவிப்பவர்களோ, சாட்சியம் அளிப்பவர்களோ இக்கொலே பற்றி எதுவும் கூறுவதற்கு முன்வர மாட்டார்கள்.

காமினி திசநாயக்காவைப் படுகொலே செய்தது விடுதலேப் புலிகளே என்று நிரூபிப்பதில் அரசு ஆர்வம் காட்டவில்லே. காமினியின் விசாரணையைத் துரிதப்படுத்தவோ அல்லது இந்திய நிபுணர்களை இங்கு அழைக்கவோ அல்லது திசநாயக்கா கலந்துகொண்ட பொதுக்கூட்டம் சம்பந்தமான வீடியோப் பிரதியை வெளியிடவோ அரசு ஆர்வமாக இல்லே.

இந்தியாவில் இருந்து புலனுய்வுத்துறைச் சிறப்புப் பிரதிநிதிகள் இலங்கை வருவது தாமதமடைவது குறித்தும் தாம் கவலேயடைவதாகவும் அவர் தெரிவித்தார்.

காமினி திசநாயக்காவைக் கொலே செய்தது விடுதலேப் புலிகள் என்பதே தமது நிலேப்பாடு என்று வழக்கறிஞர் தயா பெரேரா கூறியபோதிலும், இப்படுகொலேயைப் புலிகள்தான் என்று நிரூபிக்கும் முன்னர் யாரையும் குற்றம் சுமத்தவேண்டாம் என்று அரசாங்கம் கூறிவருவதும் குறிப்பிடத்தக்கது. [க-ம-சி]

## சந்ததிக்கான சேவை கற்பகச்சோலே

★ பிரதமருக்கு லஞ்சம் கொடுக்க முயற்சி:

# சந்திரிகாவின் வாக்குமூலத்தை லஞ்ச திணைக்களம் பெறும்

[கொழும்பு]

பிரதமர் சந்திரிகாவுக்கு லஞ்சம் கொடுக்க முற்பட்டதாக, அவர்தெரிவித்த குற்றச்சாட்டு தொடர்பாக லஞ்ச திணைக்களம் பிரதமர் சந்திரிகாவிடமிருந்து வாக்குமூலம் பெறவுள்ளது.

முன்னைய அரசு மேற்கொண்ட மோசடியான இரு சர்வதேச ஒப்பந்தங்களை தொடர்வதற்கு தனக்கு இரு தரப்பினர் பல கோடி ரூபா லஞ்சம்தர முன்வந்ததாகவும் தான் அதனை மறுத்துவிட்டதாகவும் கூட்டமொன்றில் பிரதமர் சந்திரிகா தெரிவித்ததுடன் இதுதொடர்பாக லஞ்சத் திணைக்களத்திலும் புகார் செய்திருந்தார்.

இப்புகார் குறித்து விசாரணை நடாத்துவதற்கு பிரதமரின் வாக்குமூலம் பெறப்பட வேண்டியது அவசியம் எனத் தெரிவித்துள்ள லஞ்சஆணையாளர் திருமதி நெலும் கமகே இதற்காக பிரதமரின் வாக்கு மூலம் பெறப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

பிரதமரின் வாக்கு மூலம் பெறப்படாமல் விசாரணையை ஆரம்பிக்க முடியாதெனவும் எனவே முதலில் பிரதமரின் வாக்குமூலத்தை பெற்ற பின்பே விசாரணைகள் ஆரம்பிக்கப்படுமெனவும் லஞ்ச திணைக்களம் தெரிவித்துள்ளது. [சி]

# வடக்கு கிழக்கு ஆளுநராக மூவர் பெயர் சிபார்சு

(கோழும்பு)

வட-கிழக்கு மாகாண ஆளுனராகத் தமிழ் பேசும் ஒருவரை நியமனம் செய்வதற்கு ஜனாதிபதி தனது பலத்த எதிர்ப்பைத் தெரிவித்துள்ள இவ்வேளையில் ஆளுனராக நியமனம் பெறுவதற்கு மூன்று தமிழர்களின் பெயர்களின் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

பேராசிரியர் திரு.கா. சிவத்தம்பி, ஓய்வுபெற்ற நீதிபதி திரு. பாலகிட்ணர். யாழ். அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் ஆகியோரின் பெயர்களே நியமனத்துக்காக சிபார்சு செய்யப்பட்டுள்ளதாம்.

பெரும்பாலும் பேராசிரியர் சிவத்தம்பிக்கே இப்பதவி வழங்க இருப்பதாக கூறப்படுகிறது: ஜனாதிபதியின் ஒப்புதல் கிடைத்ததும் அல்லது திருமதி சந்திரிகா ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றதும் இந்த நியமனம் வழங்கப்படும் என்றும் கூறப்படுகிறது. 161 சி

# ஜனாதிபதி தேர்தலின் முன் பாரிய தாக்குதலை புலிகள் நடத்தலாம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலுக்கு முன் புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றை நடாத்தலாம் என்ற எதிர்பார்ப்பில் படையினர் இருப்பதாக படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஆகஸ்ட் மாதம் நாடாளுமன்ற தேர்தலுக்கு முதல் நாள் புலிகள் காங்கேசன்துறையில் இரு பாரிய கப்பல்களை தகர்த்ததை சுட்டிக்காட்டியுள்ள படை வட்டாரங்கள் அதுபோல் ஜனாதிபதி தேர்தலுக்கு முனனும் தாக்குதல் நடாத்தலாமென எதிர்பார்க்கின்றனவாம்,

தற்போது பலிகளின் நடவடிக்கைகளை தாங்கள் உன்னிப்பாக அவதானிப்பதாகவும் தாக்குதல் எதுவும் இடம் பெற்றாலும் அதனை முறியடிக்கும் விதத்தில் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## கோஷ்டி மோதல்

(வேலணை)

நாவாந்துறைப்பகுதியில் நேற்று இருபகுதியினருக்கிடையில் ஏற்பட்ட சச்சரவைத் தொடர்ந்து கொட்டில் வீடுகள் எரிக்கப்பட்டன. சந்தைக்கட்டிடம் மீது கற்கள் வீசப்பட்டன. சந்தைக்கு பொருட்களை வாங்கச் சென்ற பலர் காயங்களுக்குள்ளாகினர்.

இந்த நிலையில் உடனடியாக நாவாந்துறைப்பகுதிக்கு காவல்துறையினர் சென்று அங்கு ஏற்பட்ட சச்சரவுகளை நிறுத்தியதுடன் அந்தப் பகுதியில் காவல் பணியிலும் ஈடுபட்டுவருவதாகவும் தெரிய வருகிறது, 75 சி

# ஐ.தே.க. கூட்டத்தில் மக்கள் குறைவு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலுக்கான இறுதிப் பிரசாரக் கூட்டங்களை ஐ. தே. க. ஹைட்பார்க்கிலும் பொ, ச. மு. பொரளை சம்பல் பார்க்கிலும் நேற்று மாலை நடாத்தின.

நேற்று மாலை 6-10 மணியளவில் ரணில் விக்கிரமசிங்க ஐ. தே.க. கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தபோது அதிகளவான பொதுமக்கள் வரவில்லை யென்றும் இதற்கு பாலத்துறை குண்டு வெடிப்பு காரணமாக இருக்கலாம் எனவும் பி. பி. ஸி. தெரிவித்தது.

நேற்றிரவு பொ. ச. மு. கூட்டத்தில் மிகக் கூடுதலான மக்கள் பங்குபற்றினர் என்றும் நேற்று இரவு 7-15 மணியாகியும் பிரதமர் சந்திரிகா கூட்டத்திற்கு வரவில்லை என்றும் பி. பி, ஸி. மேலும் கூறியது: [ம-சி]

## கேகாலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் பங்குபற்றினராம். ஒரு கட்டத்தில்அங்கு நடைபெற்ற துப்பாக்கிச் சமரில்ஐ. தே. க. மத்திய மாகாணசபை உறுப்பினரான ஜாலியவிமலசேன என்பவரும் இரு பொ.ச,மு, ஆதரவாளர்களும் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

மோதலின் போது கைக்குண்டு ஒன்று வீசப்பட்டதால் படுகாயமுற்ற பெண் ஒருவர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பயங்கர ஆயுதங்கள் சகிதம் மோதல் சிலமணி நேரம் நீடித்துள்ளது.

இம்மோதலினால் படுகாயமடைந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் பொலிஸ் ஜீப்சாரதியும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இம் மோதல் தொடர்பாக பலர் கைது செய்யப்பட்டுள்ளனராம். க சி

## வீதி ஒழுங்குமுறை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்த அறிக்கையில்;

கடந்த சில மாதங்களாக யாழ். குடாநாட்டுப் பிரதேசத்தில் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருவதை காணக்கூடியதாக இருக்கிறது, இதனால்ஏராளமானோர் காயப்பட்டும் சிலர் மரணத்தைத் தழுவியும் உள்ளனர்.

இவற்றை முற்றாக தடுத்து நிறுத்தும் பொருட்டு பாடசாலைகள், பொதுஸ்தாபனங்கள் ஆகியவற்றில் வீதி விபத்துக்கள் பற்றிய கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றோம். இருந்தாலும் அண்மைக்காலங்களில் வீதிவிபத்துக்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. இவ்விபத்துக்களுக்கான காரணம் பற்றி ஆய்வுகள் மேற்கொண்ட பொழுது பின்வரும் காரணங்களைக் காணக்கூடியதாக உள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் துவிச்சக்கர வண்டிகளின் பாவனை அதிகமாகவுள்ளது.

இவ்வண்டிகளை செலுத்தும் செலுத்துனர்கள், வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் பற்றி நன்றாக அறிந்திருப்பதில்லை.

இதில் முக்கியமாக துவிச்சக்கரவண்டிகளில்பக்கம் பக்கமாகச்செல்வதும், கைகோர்த்த வண்ணம் கதைத்தபடி செல்வதும் குறிப்பிடத்தக்கதாகும். இதன் காரணமாக இவ்வாறாக துவிச்சக்கரவண்டி செலுத்துனர்களினால் பாதையில் வரும் பாதசாரிகள் பற்றியோ அல்லது வாகனங்கள் பற்றியோ உணரமுடியாத நிலையில் உள்ளனர். இதையடுத்தே காவல்துறையினர் இந்த நடவடிக்கையில் இறங்கவுள்ளனர்எனவும் குறிப்பிட்டுள்ளார் [சி]

# 'விஜே'யின் பெயர் ஐ. நா. விருதுக்கு சிபார்சு

(கொழும்பு)

காலஞ்சென்ற விஜய குமாரண துங்காவுக்கு 1995-ம் ஆண்டுக்கான 'ஊ தாண்ட் விருது' வழங்கப்பட வேண்டுமென்று ஐ. நா. செயலாளர் நாயகத்துக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மதத்தலைவர்கள் பலரும், முன்னாள் ஐக்கிய நாடுகள் அதிகாரிகளும் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர். இந்த விருதை முன்னர் பெற்றவரான ராஜ்குமார் கனகசிங்கம் இந்தப் பிரேரணையை தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட இந்த நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு காலஞ்சென்ற விஜயகுமாரணதுங்க ஆற்றிய மாபெரும் பணிகள் பற்றி ஐ. நா. செயலாளர் நாயகத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த லட்சியத்துக்கென அவர் உயிரையும் தியாகம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம - சி)

## தேர்தல் பிரசாரத்தில்

[1ம் பக்கத் தொடர்ச்சி[

தல் பிரசாரத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் பற்றித்தான் கூடுதலாக எடுத்துரைத்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியோ, காமினியின் கொலையில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள் ஆனபடியால் அவர்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடாத்தக்கூடாது என்றும் அப்படி பேச்சுவார்த்தை நடத்தினால் இந்தக் காலங்களில் அவர்கள்பலம்பெற்றுவிடுவார்கள் என்றும் எனவே சமாதானம் எட்ட வேண்டுமானால் வேறு மார்க்கத்தில்தான் செல்லவேண்டும் என்றும் கூறியுள்ளதாகவும் தெரிவித்தது. (ம-சி)

## சந்திரிகாவை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; இனப்பிரச்னையை தீர்த்து வைப்பதில் பிரதமர் மேற்கொண்டுவரும் முயற்சிகள் நேர்மையானவை. தோட்டத் தொழிலாளரின் வாழ்க்கைத்தர மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இ. தொ. கா. முன்வைத்த 6 அம்சக் கோரிக்கையையும் பிரதமர் ஏற்றுள்ளார்.

பாண், மா, சீனி, மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. இதனை மனதிற்கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் சந்திரிக்காவுக்கு மனப்பூர்வமான ஆதரவை வழங்கும்படி அவர் மலையகத்தமிழருக்கும் தோட்டத் தொழிலாளருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மலையகத்தமிழ் மக்களின் எதிர்கால வாழ்க்கை நிலையை தீவிரமாக சிந்தித்த பின்னரே தாம் பொது சன ஐக்கிய முன்னணி அமைச்சரவையில் சேர்ந்து கொண்டதாகவும் தெரிவித்தார்.

இதேவேளையில் தற்சமயம் குறுகியகால விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றிருக்கும் தொண்டமான் இன்று நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (க-சி)

தமிழகத்தில்

# கடு மழை,புயலால் 52 பேர் உயிரிழப்பு

[சென்னை]

தமிழ் நாட்டில் பல பகுதிகளிலும் பெய்துவரும் கடும் மழையினாலும் புயற்காற்றினாலும் 52 பேர் இறந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது,

சென்னைநகரில் நேற்றுக் காலை 180 மில்லி மீற்றர் மழை பெய்தது. 3000 க்கும் அதிகமானோர் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். காவேரி நதியின் முகத்துவாரப் பகுதியில் ஆயிரக்காணக்கான ஹெக்டர் நெல்வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஆந்திராவில் கடும்மழை, புயலால் 160 பேர் பலியாகியுள்ளனர். (ம - சி)

## சமாதானப் பேச்சு

[1ம் பக்கத் தொடர்ச்சி[

காண்பது சாத்தியமல்ல. தாக்கிவிட்டுத் தப்பியோடும் விடுதலைப் புலிகளின் யுத்த தந்திரோபாயத்திற்கு ஈடுகொடுக்கமுடியாமல் அரசுப் படைகள் தடுமாறுகின்றன. விடுதலைப் புலிகளின் தற்கொலைப் பாணியிலான தாக்குதலைத் தடுக்கமுடியாது என்பதை இராணுவம் ஒப்புக்கொண்டுள்ளது. அரச படையினர் விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு எந்தவித வழியுமில்லாது உள்ளனர்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பது சாத்தியமல்ல என்றும் அவர் குறிப்பிட்டார். (க-சி)

## ஐ. தே. க. பிரசாரக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே பாரிய சத்தத்துடன் இந்த குண்டு வெடித்துள்ளது.

இதனால் அவ்விடத்தில் நின்ற ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார் நால்வர் படுகாயமடைந்துள்ளனர், இதனையடுத்து மக்கள் அச்சம் காரணமாக அங்கிருந்து வெளியேறிவிட்டதால் கூட்டமும் ரத்துச் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

இக்குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக பன்னலை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாட்வும் சிலர் கைதுசெய்யப்பகடுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. [சி]

## பாப்பரசர் விஜயம்: ரூ. $1\frac{1}{2}$ கோடி ஒதுக்கீடு

[கொழும்பு[

பரிசுத்த பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் அடுத்தவருடம் ஜனவரி மாதம் 20ம் திகதி இலங்கை வந்து சேர்வார் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

பாப்பரசரின் இலங்கை விஜயம் சம்பந்தமாக பிரதம மந்திரியின் விசேட செய்தியுடன் நிதிகொள்கைத் திட்டமிடல் பிரதிஅமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே வத்திக்கானுக்குச் சென்றுள்ளார்.

கத்தோலிக்க மேற்றிராணிமார் திருச்சபையினாலும், இலங்கை அரசாங்கத்தினாலும் அழைக்கப்படும் பரிசுத்த பாப்பரசர் இலங்கையில் இரண்டு நாட்கள் தங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பரிசுத்த பாப்பரசர் இலங்கை விஜயத்துக்கான செலவினங்களுக்கென 1 கோடி 5 லட்சம் ரூபாவை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. [ -சி[

## புலிகள் பறறிய

[1ம் பக்கத் தொடர்ச்சி[

சுதந்திரப் பத்திரிகையாளர் சங்கம் மேலும் தெரிவிக்கையில்: ஒக்டோபர் 27ம் திகதி டெய்லி நியூஸ், தினமின பத்திரிகைகளில் வெளிவரவிருந்த இந்தச் செய்திகளை அகற்றி, அந்த இடங்களுக்குப புதிய செய்திகள் போடப்பட்டன.

பத்திரிகைகள் சுதந்திரமாக இயங்கும் என்று பொதுசன ஐக்கிய முன்னணி அரசு அறிவித்திருந்தபோதிலும் காமினி திசநாயக்கா கொலை சம்பந்தமாக, செய்திகள் அரசாங்கப் பத்திரிகைகளில் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்றும் மேற்படி பத்திரிகையாளர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. [ம-சி]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு நவம்பர் மாதம் 07-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Nomber ,B/16336/B;